# தமிழ்நாடு மாநிலம்- பொது அறிவு கேள்வி மற்றும் பதில்கள் தமிழில்

**Q1.** இரண்டாம் தேசிய நீர் விருதுகளில், தமிழகத்தின் தரவரிசை என்ன?
What is the ranking of Tamil Nadu in the second National Water Awards?
(a) 4
(b) 3
(c) 2
(d) 1

**Q2.** இளங்கோ அடிகள் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது/எவை உண்மையாகும்?
Which of the following statements about Ilango Adigal is/are true?
(a) இளங்கோ அடிகள் ஒரு சமணத் துறவியாவார்.
(b) அவர் ஒரு சேர இளவரசனாவார்.
(c) அவர் ஒரு கவிஞர் மற்றும் சிலப்பதிகாரம் அவரின் படைப்பாகும்.
(d) மேற்கூறிய அனைத்தும்.

**Q3.** பின்வரும் நூல்களில் எது, பதினெண்மேற்கணக்கு நூல்களில் ஒன்றல்ல?
Which of the following works, does not belong to Patinenmēlkaṇakku?
(a) பத்துப்பாட்டு
(b) திருக்குறள்
(c) எட்டுத்தொகை
(d) மேற்கூறிய எதுவும் இல்லை

**Q4.** திரிகடுகம் எனும் நூல் யாரால் இயற்றப்பட்டது?
By whom was the book 'Trikadugam' written?
(a) பெருந்தேவனார்
(b) கணிமேதாவியார்
(c) நல்லாதனார்
(d) உருத்திரங்கண்ணனார்

**Q5.** பழந்தமிழகத்தில் கொண்டாடப்பட்ட விழாவான இந்திர விழா, யாரால் தொடங்கப்பட்டது?
Who started Indra festival, a festival that was celebrated in Tamil Nadu, in the ancient times?
(a) செம்பியன்
(b) எல்லாளன்
(c) இளஞ்சேட்சென்னி
(d) கரிகால் சோழன்



**Q6.** பல்லவ மன்னனான அபராசித வர்மனை கொன்று, தொண்டை நாட்டை கைப்பற்றியவர யார்?
Who killed the Pallava king Aparajita Varma and conquered Thondai Nadu?
(a) விஜயாலய சோழன்
(b) ஆதித்ய சோழன்
(c) முதலாம் பராந்தகன்
(d) ஆதித்ய கரிகாலன்

**Q7.** The Tamil Nadu government has decided to celebrate whose birth anniversary as "Social Justice Day"?
தமிழக அரசு, யாருடைய பிறந்த நாளை "சமூக நீதி தினமாக" கொண்டாட முடிவு செய்துள்ளது?
(a) பாரதியார்
(b) அயோத்தி தாசர்
(c) பெரியார்
(d) இரட்டைமலை ஸ்ரீனிவாசன்

**Q8.** எந்த ஆண்டில், சர் சி.வி. ராமன் நோபல் பரிசு பெற்றார்?
In which year did, Sir C.V. Raman receive the Nobel Prize?
(a) 1922
(b) 1925
(c) 1930
(d) 1932

**Q9.** தமிழ்நாட்டின் எந்த பறவைகள் சரணாலயம், நாட்டின் பழமையான நீர் பறவைகள் சரணாலயமாகும்?
Which bird sanctuary of Tamil Nadu, is the oldest water bird sanctuary of the country?
(a) வேட்டங்குடி பறவைகள் சரணாலயம்
(b) வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம்
(c) சித்திரன்குடி பறவைகள் சரணாலயம்
(d) கஞ்சிரன் குளம் பறவைகள் சரணாலயம்

**Q10.** Who is the current Deputy Speaker of the Tamil Nadu Legislative Assembly?
தமிழ்நாடு சட்டமன்றத்தின் தற்போதைய துணை சபாநாயகர் யார்?
(a) M. அப்பாவு
(b) K. பிச்சாண்டி
(c) P. தனபால்
(d) V. ஜெயராமன்

**Q11.** கூந்தன்குளம் பறவைகள் காப்பகம் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?
In which district is the Koonthankulam Bird Sanctuary located?
(a) கன்னியாகுமரி
(b) கடலூர்
(c) திருநெல்வேலி
(d) நாகப்பட்டினம்

**Q12.** அறச்சலூர் இசைக்கல்வெட்டு எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?
In which district is the Arachalur musical inscription located?
(a) நாமக்கல்
(b) சேலம்
(c) தஞ்சாவூர்
(d) ஈரோடு

**Q13.** காசிமார் பெரிய பள்ளிவாசல், எந்த இடத்தில் அமைந்துள்ளது?
In which place is the Kazimar Big Mosque located?
(a) சென்னை
(b) மதுரை
(c) ராமநாதபுரம்
(d) திருநெல்வேலி

**Q14.** தரங்கம்பாடியிலுள்ள மாசிலாமணிநாதர் கோவில், யாரால் கட்டப்பட்டது?
By whom was the Masilamaninathar Temple at Tharangambadi built?
(a) முதலாம் குலசேகர பாண்டியன்
(b) ஜதவர்மன் சுந்தர பாண்டியன்
(c) மாறவர்மன் சுந்தர பாண்டியன்
(d) இரண்டாம் நெடுஞ்செழியன்

**Q15.** பாண்டிய நாட்டின் தலைநகரான கொற்கை, கீழ்க்கண்ட எந்த மாவட்டங்களில் அமைந்துள்ளது?
Korkai, the capital of the Pandyan kingdom, is located in which of the following districts?
(a) திருநெல்வேலி
(b) மயிலாடுதுறை
(c) நாகப்பட்டினம்
(d) தூத்துக்குடி



**Q16.** பின்வரும் சோழ அரசர்களை, காலவரிசைப்படி ஒழுங்கமைக்கவும்:
Arrange the following Chola kings in chronological order:
1. விஜயாலய சோழன்
2. முதலாம் பராந்தக சோழன்
3. முதலாம் குலோத்துங்கச் சோழன்
4. மூன்றாம் இராசேந்திர சோழன்
(a) 4 3 2 1
(b) 1 3 4 2
(c) 1 2 3 4
(d) 1 4 2 3

**Q17.** கூற்று 1: நன்னூல், நேமிநாதம், வீரசோழியம் ஆகியவை பிற்கால சோழர் காலத்தில் எழுதப்பட்ட குறிப்பிடத்தக்க இலக்கண நூல்கள் ஆகும்.
கூற்று 2: பாண்டிக்கோவை, தக்கயாகப்பரணி ஆகியவை இலக்கியப்படைப்புகளாகும்.
a. கூற்று 1மற்றும் 2 இரண்டுமே சரி
(b) கூற்று 1 மற்றும் 2 இரண்டுமே தவறு
(c) கூற்று 1 சரி, 2 தவறு
(d) கூற்று 1 தவறு, 2 சரி

**Q18.** தமிழ்நாடு பற்றிய பின்வரும் கூற்றுகளைக் கவனியுங்கள்.
Consider the following statements about Tamil Nadu.
(a) 2001 ல் மக்கள் தொகை அடர்த்தி 480 ஆகவும், 2011 ல் 555 ஆகவும் உள்ளது.
(b) மக்கள் தொகை அடர்த்தியில், தமிழகம் 12 வது இடத்தில் உள்ளது.
(c) மேற்கூறிய இரண்டுமே சரியானவை.
(d) மேற்கூறிய இரண்டுமே தவறானவை.

**Q19.** கூற்று 1: சென்னை இந்தியாவின் மருத்துவ தலைநகரம் எனவும், வங்கி தலைநகரம் எனவும் அழைக்கப்படுகிறது.
கூற்று 2: ஒவ்வொரு ஆண்டும், பன்னாட்டு தோல் பொருட்களின் கண்காட்சி வேலூரில் நடைபெறுகிறது.
(a) கூற்று 1மற்றும் 2 இரண்டுமே சரி
(b) கூற்று 1 மற்றும் 2 இரண்டுமே தவறு
(c) கூற்று 1 சரி, 2 தவறு
(d) கூற்று 1 தவறு, 2 சரி

**Q20.** கீழ்க்கண்டவற்றை பொருத்துக.
Match the following.
(A) தென்னிந்தியாவின் கடைக்கோடி 1. பாண்டியர்கள்
(B) தென் மத்திய இந்தியா 2. பல்லவர்கள்
(C) உத்திரமேரூர் 3. முதலாம் பராந்தக சோழன்
(D) வீர நாராயண சதுர்வேதிமங்கலம் 4. முதலாம் ராஜராஜசோழன்
(a) 1 2 3 4
(b) 1 2 4 3
(c) 2 1 3 4
(d) 4 3 2 1

**Q21.** பின்வரும் அறிக்கைகளை கவனியுங்கள்.
Consider the following statements.
(a) தமிழ்நாட்டின் மிக நீளமான தேசிய நெடுஞ்சாலை NH 44 ஆகும்.
(b) இது ஓசூரிலிருந்து, திருநெல்வேலி வழியாக கன்னியாகுமரி வரை செல்கிறது. இதன் நீளம் 7262 கிலோமீட்டர் ஆகும்.
(c) மேற்கூறிய இரண்டும் தவறானவை.
(d) மேற்கூறிய இரண்டும் சரியானவை.

**Q22.** தவத்திரு குன்றக்குடி அடிகளார், எந்த மாவட்டத்தை சார்ந்தவர் ஆவார்?
To which district does Thavatthiru Kunrakkudi Adigalar belong?
(a) தஞ்சாவூர்
(b) மதுரை
(c) சிவகங்கை
(d) செங்கற்பட்டு

**Q23.** களப்பிரர் காலத்தில் மதுரையில் திராவிட சங்கத்தை ஏற்படுத்திய சமணத் துறவி யார்?
Who was the Jain monk who formed the Dravida Sangam in Madurai during the Kalabhira period?
(a) வஜ்ஜிரநந்தி
(b) பார்சவமுனிவர்
(c) மகாவீரர்
(d) மகாகசபர்

**Q24.** விஜயநகர கட்டிட தூண்களில், பெரும்பாலும் காணப்படும் விலங்கு யாது?
Which of these animals is most commonly found in the pillars of Vijayanagar?
(a) யானை
(b) குதிரை
(c) பசு
(d) மான்



**Q25.** பின்னலாடை உற்பத்தி அதிகம் உள்ள இடம் எது?
Which place has the highest production of knitwear?
(a) கோயம்புத்தூர்
(b) திருப்பூர்
(c) ஈரோடு
(d) கரூர்

**Q26.** கீழ்க்கண்டவற்றுள் தவறான இணை எது.
Which of the following pairs in correct?
(a) தமிழ்நாட்டின் நுழைவாயில் - தூத்துக்குடி
(b) வீட்டு ஜவுளி தயாரிப்பு - ஈரோடு
(c) எஃகு நகரம் - சேலம்
(d) பம்ப் நகரம் - கோயம்புத்தூர்

**Q27.** சிமெண்ட் உற்பத்தியில், தமிழ்நாடு இந்தியாவில் எந்த இடத்தில் உள்ளது?
In cement production, which place in India does Tamil Nadu stand?
(a) 3
(b) 4
(c) 1
(d) 2

**Q28.** சமண மதத்திலிருந்த போது, அப்பர் எவ்வாறு அறியப்பட்டார்?
When Appar was practicing Jainism, how was he known as?
(a) தீர்த்தங்கரர்
(b) அரிசேனா
(c) சிவஞானசித்தியார்
(d) தர்மசேனர்

**Q29.** தமிழ் நாட்டில் அ.இ.அ.தி.மு.க. முதன்முதலில் ஆட்சிக்கு வந்த ஆண்டு-
The year AIADMK first came to power in Tamil Nadu-
(a) 1972
(b) 1977
(c) 1982
(d) 1984

**Q30.** மன்னர் திருமலை நாயக்கரின் தலைநகர் எது?
Which was the capital of the King Thirumalai Nayakkar?
(a) உறையூர்
(b) மதுரை
(c) தஞ்சாவூர்
(d) பூம்புஹார்

## SOLUTIONS

**S1. Ans.(d)**

**Sol.** நவம்பர் 11, 2020 அன்று, துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு இரண்டாவது தேசிய நீர் விருதுகளை அறிவித்தார். தமிழ்நாடு முதல் இடத்தையும், மகாராஷ்டிரா மற்றும் ராஜஸ்தான் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களையும் வென்றன.

**S2. Ans.(d)**

**Sol.** இளங்கோ அடிகள் ஒரு சமண துறவி, சேர இளவரசர் மற்றும் கவிஞர் ஆவார். தமிழ் இலக்கியத்தின் ஐந்து பெரிய காவியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தின் ஆசிரியராக கருதப்படுகிறார். அவர் தன்னை ஒரு புகழ்பெற்ற சேர மன்னரான செங்குட்டுவன் என்பவரின் சகோதரர் என்று, சிலப்பதிகாரத்தின் ஒரு பதிகத்தில் கூறியிருக்கிறார்.

**S3. Ans.(b)**

**Sol.** தமிழகத்தில் சங்ககாலத்தில் பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரையில் நிலவிய கடைச்சங்க காலத்தில் இயற்றப்பட்ட பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்கள் பதினெண் மேற்கணக்கு நூல்கள் என வழங்கப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும், வெவ்வேறு புலவர்களால் பாடப்பட்டவை. இவை தொகை நூல்கள் என வழங்கப்படுகின்றன. பல நூல்களின் தொகுப்பே தொகை நூல்கள்.

**S4. Ans.(c)**

**Sol.** திரிகடுகம் என்பது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும். இந்நூல் நல்லாதனார் என்னும் புலவரால் இயற்றப்பட்டதாகும். திரிகடுகம் என்பது மூன்று மருந்துப் பொருட்களைக் குறிக்கும். சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் மூலிகைகள் உடலுக்கு நன்மை செய்வது போல், இதிலுள்ள பாடல்கள் ஒவ்வொன்றிலும் கூறப்பட்டுள்ள மூன்று நீதிகள் மனிதனின் அறியாமையாகிய நோயைப் போக்கி, வாழ்க்கை செம்மை பெற உதவுமென்ற கருத்தமைந்தமையால், இது திரிகடுகம் எனப்படுகிறது.

**S5. Ans.(a)**

**Sol.** இந்திர விழா என்பது இந்திரனை சிறப்பிக்கும் வகையில் பழந்தமிழகத்தில் கொண்டாடப்பட்ட விழாவாகும். இவ்விழாவைத் தீவகச் சாந்தி செய்தரு நன்னாள் என்று சாத்தனார் கூறுகின்றார். இவ்விழா புகார் என்ற நகரோடு அதிகம் தொடர்புற்றிருந்தாலும், மதுரையிலும் கொண்டாடப்பட்டது. தூங்கெயிலெறிந்த தொடித்தோள் செம்பியன் என்ற சோழ மன்னன் இதை தொடங்கினான். சிலப்பதிகாரம், மணிமேகலை காலங்களில் இவ்விழா அரசாங்க விழாவாகவே கொண்டாடப்பட்டது.



**S6. Ans.(b)**
**Sol.** ஆதித்த சோழன் (கி.பி 871 - 907), கோப்பரகேசரி விசயாலய சோழனின் மகன். இவனும் தன் தந்தையுடன் திருப்புறம்பிய போரில் பங்குபற்றினான். பல்லவ மன்னன் அபராசித வர்மனை கொன்று தொண்டை நாட்டை கைப்பற்றினான்.

**S7. Ans.(c)**
**Sol.** சீர்திருத்தவாதி EV ராமசாமி பெரியாரின் பிறந்த நாளை "சமூக நீதி தினம்" ஆக கொண்டாட தமிழக அரசு முடிவு செய்துள்ளது. EV ராமசாமி பெரியார், செப்டம்பர் 17 அன்று பிறந்தார். இந்த நாள், இப்போது ஒவ்வொரு ஆண்டும் 'சமூக நீதி தினமாக' கொண்டாடப்படும். பெரியாரின் சித்தாந்தம் சமூக நீதி, சமத்துவம், சுயமரியாதை மற்றும் பகுத்தறிவு பற்றியது.

**S8. Ans.(c)**
**Sol.** 1929 ஆம் ஆண்டில், பிரிட்டிஷ் பேரரசால் இவருக்கு “நைட் ஹீட்” என்ற பட்டமும், இங்கிலாந்து அரசியாரால் 'சர்' பட்டமும் அளிக்கப் பட்டது. 1930ல், தனது இயற்பியலுக்கான ஒளி சிதறல் ஆராய்ச்சிக்காக சர் சி.வி. ராமன் அவர்களுக்கு 'நோபல் பரிசு' வழங்கப்பட்டது. பின்னர் இந்த கண்டுபிடிப்புக்கு “ராமன் விளைவு” என்று பெயரிடப்பட்டது.

**S9. Ans.(b)**
**Sol.** வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம், இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில், செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் தாலுகாவில் அமைந்துள்ள, 30 ஹெக்டேர் கொண்ட ஒரு பாதுகாக்கப்பட்ட பகுதியாகும். வேடந்தாங்கல், நாட்டின் பழமையான நீர் பறவைகள் சரணாலயம் ஆகும்.

**S10. Ans.(b)**
**Sol.** தமிழ்நாடு சட்டமன்றம்
சபாநாயகர் - மு. அப்பாவு, 12 மே 2021
துணை சபாநாயகர் - கே. பிச்சாண்டி, 12 மே 2021
சபைத் தலைவர் - துரை முருகன், 11 மே 2021

**S11. Ans.(c)**
**Sol.** கூந்தன்குளம் பறவைகள் காப்பகம் (Koonthankulam Bird Sanctuary) தமிழகத்தின் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள நான்குநேரி வட்டத்தில் உள்ளது. இக்காப்பகம் கூந்தன்குளம் என்ற ஊரில் அமைந்துள்ள பாதுகாக்கப்பட்ட பகுதி. இதன் பரப்பு 1.2933 ச.கிமீ. இது 1994-ஆம் ஆண்டு பறவைகள் காப்பகமாக அறிவிக்கப்பட்டது.

**S12. Ans.(d)**
**Sol.** அரச்சலூர் இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில், ஈரோடு மாவட்டத்தில், ஈரோடு வட்டத்தில் இருக்கும் ஒரு பேரூராட்சி ஆகும். இங்கு அறச்சலூர் இசைக்கல்வெட்டு உள்ளது.

**S13. Ans.(b)**
**Sol.** காசிமார் பெரிய பள்ளிவாசல் அல்லது காசிமார் மசூதி என்பது மதுரை நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள ஒரு பழமையான மசூதி ஆகும். ஓமானிலிருந்து வந்த அசரத்து காசி சையது தாசுத்தீனால் கூன் பாண்டியனிடமிருந்து பெறப்பட்ட நிலத்தில் இம்மசூதி கட்டப்பட்டுள்ளது. இது மதுரை நகரின் முதல் மற்றும் தமிழகத்தின் பழமையான முசுலிம் வழிபாட்டிடங்களில் ஒன்றாக உள்ளது.

**S14. Ans.(a)**
**Sol.** முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் 1268-1308 CE க்கு இடையில் தென்னிந்தியாவின் பகுதிகளை ஆண்ட பாண்டிய மன்னன் ஆவார். குலசேகரன் தரங்கம்பாடியில் மணிவண்ணேஸ்வரம் அல்லது மாசிலாமணிநாதர் எனும் கோயிலை கட்டினார்.

**S15. Ans.(d)**
**Sol.** கொற்கை, இந்தியாவின் தமிழ்நாட்டில் தூத்துக்குடி மாவட்டத்தின், ஸ்ரீவைகுண்டம் தாலுகாவில் உள்ள ஒரு சிறிய கிராமம். கொற்கை தலைநகரம், முதன்மையான வர்த்தக மையம் மற்றும் ஆரம்பகால பாண்டிய அரசின் முக்கிய துறைமுகம் ஆகும்.

**S16. Ans.(c)**

**S17. Ans.(a)**

**S18. Ans.(c)**

**S19. Ans.(c)**

**S20. Ans.(a)**

**S21. Ans.(a)**
**Sol.** தமிழ்நாட்டின் மிக நீளமான தேசிய நெடுஞ்சாலை NH 44 ஆகும். இது ஒசூரில் இருந்து திருநெல்வேலி வழியாக கன்னியாகுமரி வரை செல்கிறது. இதன் நீளம் 6272 கிமீ.

**S22. Ans.(c)**
**Sol.** குன்றக்குடி அடிகள் (சூலை 11, 1925 - ஏப்ரல் 15, 1995) சமயம், இலக்கியம், மட்டுமன்றி பேச்சுத்திறன், எழுத்துத்திறன், இசை போன்று பல துறைகளிலும் ஆழ்ந்த புலமை பெற்றவர். குன்றக்குடி ஆதீனத்தின் மடாதியாக இருந்தவர்.




**S23. Ans.(a)**
**Sol.** தற்போதைய தமிழ்நாட்டில் மதுரை நகரில் வஜ்ரானந்தி என்ற சமண துறவியால் திராவிட சங்கம் 470 CE இல் நிறுவப்பட்டது. மதுரை அப்போது கலாப்ரா ஆட்சியின் கீழ் இருந்தது.

**S24. Ans.(b)**

**Sol.** விஜயநகர அரசர்களின் கோவில் கட்டுமான நடவடிக்கைககள் ஒரு புதிய பாணியை உருவாக்கின. அது விஜயநகரப் பாணி என அழைக்கப்பட்டது.பெரும் எண்ணிக்கையிலான வடிவத்தில் பெரிய தூண்களும் அவற்றில் இடம்பெற்றுள்ள சிற்ப, செதுக்கல் வேலைப்பாடுகளும் விஜயநகரப் பாணியின் தனித்துவ அடையாளங்களாகத் திகழ்ந்தன. இத்தூண்களில் செதுக்கப்பட்டுள்ள விலங்குகளில், குதிரைகள் அதிகமாக இடம் பெற்றுள்ளன.

**S25. Ans.(c)**

**Sol.** பின்னலாடைகளின் நகரம் என அழைக்கப்படும் திருப்பூர், 3 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பில் பின்னலாடை ஏற்றுமதி செய்கிறது. திரைச்சீலைகள், படுக்கை, விரிப்புகள், சமையலறை மேஜை விரிப்புகள், சுவர் அலங்காரங்கள் போன்ற உள்நாட்டு தயாரிப்புகள் மற்றும் ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கிறது. ஈரோடு மாவட்டம், இந்தியாவின் மொத்த மற்றும் சில்லறை ஆயத்த ஆடைகளுக்கு முக்கிய சந்தையாக உள்ளது.

**S26. Ans.(b)**

**S27. Ans.(a)**

**Sol.** சிமெண்ட் உற்பத்தியில் தமிழ்நாடு, இந்திய அளவில் 3 ம் இடத்தில் உள்ளது. ஆந்திரப் பிரதேசம் முதலிடத்திலும், ராஜஸ்தான் இரண்டாமிடத்திலும் உள்ளது. 2018ல் இந்தியாவில் உள்ள 10 மிகப்பெரிய சிமெண்ட் உற்பத்தி நிறுவனங்களில், தமிழ்நாட்டைச் சேர்ந்த ராம்கோ சிமெண்ட் மற்றும் இந்தியா சிமெண்ட் ஆகிய நிறுவனங்கள் இடம் பெற்றுள்ளன.

**S28. Ans.(d)**

**S29. Ans.(b)**

**S30. Ans.(c)**















DOWNLOAD
Admit Card


வெற்றி வாராந்திர நடப்பு
நிகழ்வுகள் PDF தமிழில்
for TNPSC Group 1, TNPSC Group 2/2A,
TNPSC Group 4, TNUSRB, TNFUSRC,
IBPS, SSC, IBPS RRB, SBI, RRB, UPSC etc.


UPCOMING JOB
ALERT ARTICLE
IN TAMIL
for TNPSC Group 1, TNPSC Group 2/2A,
TNPSC Group 4, TNUSRB, TNFUSRC,
IBPS, SSC, IBPS RRB, SBI, RRB, UPSC etc.


TAMILNADU
STATE
GENERAL KNOWLEDGE
Q & A PDF
தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்


ஜூலை மாத பதிப்பு
வெற்றி ADDA247
தமிழ்நாடு நடப்பு
நிகழ்வுகள் தமிழில் 2021 PDF
TNPSC Group 1, TNPSC Group 2/2A, TNPSC Group 3 & 4,
TNUSRB, TNFUSRC, IBPS, SSC, IBPS RRB, SBI, RRB மேலும் பல


ஜூலை மாத பதிப்பு
வெற்றி ADDA247
மாதாந்திர நடப்பு
நிகழ்வுகள் Q&A தமிழில் 2021 PDF
TNPSC Group 1, TNPSC Group 2/2A, TNPSC Group 3 & 4,
TNUSRB, TNFUSRC, IBPS, SSC, IBPS RRB, SBI, RRB மேலும் பல
தமிழில் 270 முக்கிய கேள்விகள்
PDF வடிவில்
பதில்களுடன்
போட்டித் தேர்வுக்கானது










ADDA247 APP க்குச் செல்லுங்கள், தமிழ்நாடு மாநிலத் தேர்வு பிரிவில் பயிலுங்கள்.

வெற்றிப்படி நமதே!!!